**ஜூலை – 14**

# TNPSC துளிகள்

- பிட்ஸ் பிலானியைச் (பிட்ஸ் பிலானி (பிர்லா தொழில்நுட்ப மற்றும் அறிவியல் நிறுவனம்) சார்ந்த அறிவியலாளர்கள், IBM குவாண்டம் நிறுவனத்துடன் இணைந்து, பாரம்பரியக் கணினிகளை விடச் சிறந்ததாகச் செயல்படும் குவாண்டம் நெறிமுறை ஒன்றை உருவாக்கியுள்ளனர்.
- பெங்களூருவில் உள்ள ஜவஹர்லால் நேரு மேம்பட்ட அறிவியல் ஆராய்ச்சி மையத்தின் (JNCASR) ஆராய்ச்சியாளர்கள், இயந்திர திரிபைப் பயன்படுத்தி உலோகங்களின் ஒளியியல் பண்புகளை மாற்ற முடியும் என்பதை முதல்முறையாக நிரூபித்துள்ளனர்.
  - இயந்திர உருமாற்றத்தின் மூலம் உலோகத்தின் கட்டமைப்பை மாற்றுவதன் மூலம் ஒளியுடனான அதன் தொடர்பைக் கட்டுப்படுத்தும் உலோகங்களின் பிளாஸ்மான் அதிர்வுப் பண்பை மாற்றியமைக்கலாம் என்று இந்த ஆய்வு காட்டுகிறது.
- 2026-27 ஆம் ஆண்டிலிருந்து தமிழ்நாட்டிற்கு கூடுதலாக 100 எம்பிபிஎஸ் இடங்களுக்கு தேசிய மருத்துவ ஆணையம் (NMC) ஒப்புதல் அளித்துள்ளதுடன் இதில் நாமக்கல் மற்றும் திருப்பூர் அரசு மருத்துவக் கல்லூரிகளுக்கு தலா 50 இடங்களை கூடுதலாக ஒதுக்கியுள்ளன.
- ஒடிசாவில் உள்ள சண்டிப்பூர் ஒருங்கிணைந்த சோதனைத் தளத்தில் (ITR) பினாகா தொலை தூர வழிகாட்டப்பட்ட எறிகணையை (LRGR) பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம் (DRDO) வெற்றிகரமாக சோதனை செய்துள்ளது.
- PROTAC (புரதச்சிதைவு-இலக்கு கைமேரா) தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட உலகின் முதல் சிகிச்சையான 'வெப்டெஜெஸ்ட்ரண்ட்' (vepdegestrant) மருந்துக்கு அமெரிக்க உணவு மற்றும் மருந்து நிர்வாகம் (FDA) ஒப்புதல் அளித்துள்ளது.
  - அர்வினாஸ் மற்றும் ஃபைசர் நிறுவனங்களால் உருவாக்கப்பட்ட ஒரு வாய்வழி மருந்தான வெப்டெஜெஸ்ட்ரண்ட் ESR1-பிறழ்வு கொண்ட, ER-நேர்மறை (ஈஸ்ட்ரோஜன் ஏற்பி-நேர்மறை) மற்றும் HER2-எதிர்மறை வகை மேம்பட்ட மார்பக புற்றுநோய்க்கு சிகிச்சையளிக்க பயன்படுகிறது.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## தமிழ்நாட்டில் கருவுறுதல் விகிதம் 2026

- தமிழ்நாட்டின் மொத்த கருவுறுதல் விகிதம் (TFR) 2026 ஆம் ஆண்டில் 1.3 ஆகக் குறைந்து உள்ளதுஎன்பதுடன் இது மக்கள்தொகை நிலைத்தன்மைக்குத் தேவையான மாற்று அளவான 2.1 ஐ விடக் குறைவாகும்.
- மொத்த கருவுறுதல் விகிதம் (TFR) என்பது ஒரு பெண் தனது பேறு காலத்தில் பெற்றெடுக்கும் குழந்தைகளின் சராசரி எண்ணிக்கையைக் குறிக்கிறது.
- 2025 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டின் TFR 1.4 ஆக இருந்தது, அதே சமயம் இந்தியாவின் ஒட்டு மொத்த TFR 1.9 ஆக உள்ளது.
- மாநிலத்தில் முதியோர் மக்கள் தொகை அதிகரித்து வருவதுடன் 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் 16% ஆக உள்ளனர்; இது அடுத்த 10 ஆண்டுகளில் 20% ஆக அதிகரிக்க வாய்ப்புள்ளது.
- பொருளாதாரக் காரணிகள், பணியிடங்களில் பெண்களின் பங்களிப்பு, தாமதமான திருமணங்கள் மற்றும் குடும்ப விருப்பங்களில் ஏற்படும் மாற்றங்கள் ஆகியவை

கருவுறுதல் விகிதம் சரிவை ஏற்படுத்தும் காரணிகளில் அடங்கும்.

- தமிழ்நாட்டில் பணியிடங்களில் பெண்களின் பங்களிப்பு அதிகமாக உள்ளதுடன் இந்தியாவில் உள்ள ஒவ்வொரு 100 வேலை பார்க்கும் பெண்களிலும் 41 பேர் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் ஆவர்.
- மருத்துவமனைகளில் பிரசவம், பிரசவங்களுக்கு இடையே 2 முதல் 3 ஆண்டுகள் இடைவெளி, தாய்மார்கள் சுகாதார ஆதரவு மற்றும் சுகாதாரச் சேவைகளை வலுப்படுத்துதல் ஆகியவற்றை அரசு வலியுறுத்துகிறது.

| | Lowest TFR States/UTs (2024) | TFR (2024) |
|---|---|---|
| 01 | Delhi | 1.2 |
| 02 | Kerala | 1.3 |
| 03 | Tamil Nadu | 1.3 |
| 04 | West Bengal | 1.3 |
| 05 | Andhra Pradesh | 1.4 |
| 06 | Maharashtra | 1.4 |
| 07 | Punjab | 1.4 |
| 08 | Jammu & Kashmir | 1.4 |

# தேசியச் செய்திகள்

## உயர் கல்விக்கான அகில இந்திய கணக்கெடுப்பு 2023-24




- சமீபத்திய உயர் கல்விக்கான அகில இந்திய கணக்கெடுப்பு (AISHE) 2023-24 ஆம் ஆண்டுத் தரவுகளின்படி, உயர் கல்வியில் பெண்களின் சேர்க்கை கணிசமாக அதிகரித்துள்ளது.
- கடந்த பத்து ஆண்டுகளில் பெண்களின் சேர்க்கை 42% அதிகரித்துள்ளது. இது 2014-15

ஆம் ஆண்டில் 1.57 கோடியாக இருந்து 2023-24 ஆம் ஆண்டில் 2.24 கோடியாக உயர்ந்து உள்ளது.

- தற்போதைய மொத்த உயர்கல்வி மாணாக்கர்களில் பெண்கள் 49.7% ஆக உள்ளனர், மேலும் பாலின சமத்துவக் குறியீடு (GPI) 1.08 ஆக உள்ளது.
- பட்டியலிடப்பட்ட சாதியினர் (SC) மற்றும் பட்டியலிடப்பட்ட பழங்குடியின (ST) சமூகப் பெண்களின் சேர்க்கை முறையே 51.4% மற்றும் 75.7% அதிகரித்துள்ளது.
- STEM (அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் கணிதம்) பாடப்பிரிவுகளில் பெண்கள் 44% ஆக உள்ளனர், ஆனால் பொது அறிவியலை ஒப்பிடுகையில் பொறியியல் மற்றும் தொழில்நுட்பத்தில் (31.1%) பெண்களின் பங்களிப்பு இன்னும் குறைவாகவே உள்ளது.

## சர்வதேசச் செய்திகள்

### ஹமாஸ் காசா அரசாங்கம் கலைப்பு





- சற்றேறத்தாழ இரண்டு தசாப்த கால நிர்வாகத்திற்குப் பிறகு, தனது காசா அரசாங்கத்தைக் கலைப்பதாக ஹமாஸ் அறிவித்துள்ளதுடன் அதன் அதிகாரத்தை காசா நிர்வாகத்திற்கான தேசியக் குழுவிடம் (NCAG) மாற்றியுள்ளது.
- NCAG என்பது அமெரிக்க ஆதரவு அமைதித் திட்டத்தின் ஒரு பகுதியாக ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் தீர்மானம் 2803-இன் கீழ் 2026 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் உருவாக்கப் பட்ட பாலஸ்தீனிய தொழில்நுட்ப இடைக்கால அமைப்பாகும்.
- ஒருங்கிணைந்த பாதுகாப்புக் கட்டமைப்பின் மூலம் சுகாதாரம், கல்வி, நீர் சேவைகள் மற்றும் சட்டம் ஒழுங்கு உள்ளிட்ட சிவில் விவகாரங்களை NCAG நிர்வகிக்கும்.
- தொழில்நுட்ப மற்றும் தொழில்முறை அரசு ஊழியர்கள் தொடர்ந்து NCAG-இன் கீழ் செயல்படுவார்கள் என்று ஹமாஸ் தெரிவித்துள்ளது, ஆனால் இந்த நடவடிக்கை ஆனது ஹமாஸின் ஆயுதக் குறைப்பு பற்றி வெளிப்படையாகக் குறிப்பிட வில்லை.

- பாதுகாப்பு கட்டுப்பாடு மற்றும் நிர்வாகம் தொடர்பாக கருத்து வேறுபாடுகள் இருந்தாலும், இந்த ஆட்சி மாற்றம் காசாவின் மறுசீரமைப்பிற்கு ஆதரவளிப்பதையும் போர்நிறுத்தக் கட்டமைப்பைச் செயல்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டு உள்ளது.

# பொருளாதாரச் செய்திகள்

## சேவைகள் உற்பத்திக் குறியீடு

- இந்தியாவின் வரவிருக்கும் சேவைகள் உற்பத்திக் குறியீடு (ISP), சரக்கு மற்றும் சேவை வரி (GST) தரவு, நிர்வாகத் தரவு மற்றும் ஆய்வுகளைப் பயன்படுத்தி அமைப்புசார் சேவைகள் துறையின் உற்பத்தியை அளவிடும்.
- இந்தக் குறியீடு இந்தியாவின் அமைப்புசார் சேவைத் துறை உற்பத்தியை அவ்வப் போது அளவிடுவதற்கான முதல் முயற்சியாக அமையும்.
- இதற்கு GST தரவு முதன்மை ஆதாரமாக இருக்கும், அதே வேளையில் GST வரம்பிற்குள் வராத துறைகளுக்கு நிறுவன சேவைகள் துறை நிறுவனங்களின் வருடாந்திர ஆய்வு (ASISSE) மற்றும் நிர்வாகத் தரவுகள் துணைபுரியும்.
- இந்திய ரிசர்வ் வங்கி (RBI), ரயில்வே துறை வாரியம், சிவில் விமானப் போக்குவரத்து இயக்குநரகம் (DGCA) மற்றும் இந்திய காப்பீட்டு ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையம் (IRDAI) ஆகியவை நிர்வாகத் தரவு ஆதாரங்களில் அடங்கும்.
- ISP-இன் முதல் வெளியீடு 2026 ஆம் ஆண்டு ஜூலை 29 அன்று திட்டமிடப்பட்டுள்ளது, என்பதோடு இது அமைப்புசார் சேவைகள் துறையை மட்டுமே உள்ளடக்கியதாக இருக்கும்.




# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## திருஷ்டி செயற்கைக்கோள் தகவல் தொடர்பு தோல்வி


- உலகின் முதல் OptoSAR (ஒளியியல் + செயற்கை துளை ரேடார்) செயற்கைக்கோளான திருஷ்டி (Drishti) திட்டமானது, புவி காந்த சூரியப் புயலால் ஏற்பட்ட முரண்பாடு

காரணமாக தனது தகவல் தொடர்பை இழந்தது.

- ஏவுதல் மற்றும் ஆரம்பச் சுற்றுப்பாதைக் கட்டத்தின் போது சூரியப் புயலின் கதிர்வீச்சு ஒரு முக்கிய செயற்கைக்கோள் அமைப்பைப் பாதித்துள்ளது.
- ஒரே இடத்தின் ஒளியியல் பல-நிறமாலை மற்றும் செயற்கை துளை ரேடார் (SAR) படங்களை ஒரே நேரத்தில் எடுக்கும் வகையில் இந்தச் செயற்கைக்கோள் என்பது வடிவமைக்கப் பட்டது.
- மேகமூட்டங்கள் மற்றும் இரவு நேரங்களிலும் செயல்படக்கூடிய SAR சென்சார்களைப் பயன்படுத்துவதன் மூலம் வெப்ப மண்டல மேகமூட்டப் பிரச்சினையைச் சமாளிப்பதை இது நோக்கமாகக் கொண்டிருந்தது.
- எளிதான புரிதலுக்காக SAR தரவுகளிலிருந்து ஒளியியல் சார்ந்த படங்களை உருவாக்க திருஷ்டி செயற்கைக்கோள் செயற்கை நுண்ணறிவைப் (AI) பயன்படுத்தியது.
- எல்லை கண்காணிப்பு, பாதுகாப்பு, பேரிடர் மேலாண்மை, விவசாயம், உள்கட்டமைப்பு திட்டமிடல் மற்றும் காப்பீட்டு மதிப்பீடு உள்ளிட்ட பயன்பாடுகளுக்காக இந்தச் செயற்கைக்கோள் திட்டமிடப்பட்டிருந்தது.




## ஸ்விஃப்ட் பூஸ்ட் திட்டம்




- நீல் கெரெல்ஸ் ஸ்விஃப்ட் ஆய்வகத்தின் ஆயுட்காலத்தை நீட்டிப்பதற்கான முதல் செயற்கைக்கோள் சேவைத் திட்டமான ஸ்விஃப்ட் பூஸ்ட் (Swift Boost) திட்டத்தை நாசா ஏவியது.
- ஸ்விஃப்ட்டின் சுற்றுப்பாதையைக் கைப்பற்றி உயர்த்துவதற்காக கேடலிஸ்ட் ஸ்பேஸ் டெக்னாலஜிஸ் நிறுவனம் உருவாக்கிய 'லிங்க்' (LINK) என்ற தனியார் சேவை

விண்கலத்தை இந்தத் திட்டம் அனுப்பியது.

- 2004 ஆம் ஆண்டில் ஏவப்பட்ட ஸ்விஃப்ட் ஆய்வகம் காமா கதிர் வெடிப்புகள் மற்றும் உயர் ஆற்றல் அண்ட நிகழ்வுகள் பற்றி ஆய்வு செய்கிறது.
- ஸ்விஃப்ட் செயற்கைக்கோளை சுமார் 600 கி.மீ உயர சுற்றுப்பாதைக்கு மாற்ற இயந்திரக் கைகள் மற்றும் அயனி உந்துதல்களை LINK பயன்படுத்தும்; இதன்மூலம் அதன் செயல்பாட்டு ஆயுள் நீட்டிக்கப்படுகிறது.
- இந்தத் திட்டம் 1990 ஆம் ஆண்டில் தனது செயல்பாட்டைத் தொடங்கிய நார்த்ரோப் க்ரம்மனின் பெகாசஸ் XL எறிகணையின் 45 வது மற்றும் இறுதிப் பயணத்தையும் குறிக்கிறது.

# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## அதிக வெப்பம் மற்றும் உணவு அமைப்புகள் குறித்த FAO-WMO அறிக்கை (2026)




- உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு (FAO) மற்றும் உலக வானிலை அமைப்பு (WMO) இணைந்து வெளியிட்ட அறிக்கையானது, உலகளாவிய உணவுப் பாதுகாப்பிற்கு அதிக வெப்பம் ஒரு முக்கிய அச்சுறுத்தலாக உள்ளது என்பதை அடையாளம் கண்டுள்ளது.
- 30°Cக்கும் அதிகமான வெப்பநிலையில் முக்கியப் பயிர்கள் மகசூல் இழப்பைச் சந்திக்கின்றன; ஒவ்வொரு 1°C வெப்பமயமாதலும் மக்காச்சோளத்தை 7.5%, சோயா பீனை 6.8% மற்றும் கோதுமையை 6% குறைக்கலாம்.
- அதிகரித்து வரும் வெப்ப அழுத்தம் காரணமாக, 1961 ஆம் ஆண்டிலிருந்து உலகளாவிய விவசாய மொத்த காரணி உற்பத்தித்திறன் (TFP) 21% குறைந்துள்ளது.
- அதிக ஆபத்துள்ள பகுதிகளில் இந்தியாவும் ஒன்றாகும் என்ற நிலையில் இங்கு வெப்ப அலைகள் அரிசி உற்பத்தி மற்றும் விவசாயத் தொழிலாளர்களைப் பாதிக்கின்றன; வெப்ப அழுத்தம் காரணமாக 2024 ஆம் ஆண்டில் தொழிலாளர்கள் 648 வேலை நேரங்களை (54 நாட்கள்) இழந்துள்ளனர்.
- அதிகரித்து வரும் வெப்பநிலை மற்றும் கடல் வெப்ப அலைகள் காரணமாக கால்நடைகள், மீன்வளம், காடுகள் மற்றும் பழத்தோட்டங்களுக்கு ஏற்படும் அபாயங்களை இந்த அறிக்கை எடுத்துக்காட்டுகிறது.

## உலக முதலீட்டு அறிக்கை 2026

- வர்த்தகம் மற்றும் வளர்ச்சிக்கான ஐக்கிய நாடுகளின் மாநாடானது (UNCTAD) உலக முதலீட்டு அறிக்கை 2026-ஐ வெளியிட்டதுடன் இது உலகளாவிய முதலீடு அதிகளவில்

குவிந்து வருவதை எடுத்துக்காட்டுகிறது.

- உலகளாவிய அந்நிய நேரடி முதலீடு (FDI) 6% அதிகரித்து 2025 ஆம் ஆண்டில் $1.6 டிரில்லியனாக உயர்ந்துள்ளது என்பதோடு இதில் வளரும் நாடுகளை விட வளர்ந்த பொருளாதார நாடுகள் அதிக வளர்ச்சியைப் பெற்றுள்ளன.
- முதல் 20 நாடுகள் உலகளாவிய FDI வரவுகளில் 80%க்கும் அதிகமான பங்கைக் கொண்டுள்ளன என்பதுடன் இது முதலீடு ஒரு சில இடங்களில் குவிவதைக் காட்டுகிறது.
- செயற்கை நுண்ணறிவு (AI) உள்கட்டமைப்பு, தரவு மையங்கள், குறைக்கடத்திகள் மற்றும் எரிசக்தித் துறைகள் ஆகியவை முக்கியமாக இந்த வளர்ச்சியை உந்தின.
- 2025 ஆம் ஆண்டில் இந்தியா தனது தரவரிசையை மேம்படுத்தி, உள்வரும் அந்நிய நேரடி முதலீட்டில் (inward FDI) 11-வது இடத்திற்கும், வெளிச்செல்லும் முதலீட்டில் (outward FDI) 18-வது இடத்திற்கும் முன்னேறியுள்ளது.




## மாநிலச் செய்திகள்

### டெல்லி காடு வளர்ப்புத் திட்டம்




- பசுமை செயல் திட்டம் 2026-27 ஆம் ஆண்டின் கீழ் 'திட்டம் 70 லட்சம் மரம் நடும் பிரச்சாரம்' மற்றும் 'டெல்லி மலைமுகடுப் புத்துயிர் பிரச்சாரம்' ஆகியவற்றை டெல்லி

தொடங்கியது.

- இந்தப் பிரச்சாரம் டெல்லி முழுவதும் 70 லட்சத்திற்கும் அதிகமான மரக்கன்றுகளை நடுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது, அதே நேரத்தில் மலைமுகடு மறுசீரமைப்புத் திட்டம் 2030 ஆம் ஆண்டிற்குள் 6,303.55 ஹெக்டேர் பரப்பளவில் 1 கோடி நாட்டு மரக் கன்றுகளை நடுவதை இலக்காகக் கொண்டுள்ளது.
- ஆரவல்லி மலைத் தொடரின் ஒரு பகுதியான டெல்லி மலைமுகடு, ஆக்கிரமிப்புத் தாவரமான சீமைக்கருவேல மரங்களை (விலையாதி கீகர் - ப்ரோசோபிஸ் ஜூலிஃப்ளோரா) அகற்றிவிட்டு, வேம்பு, அரசு, ஆல் மற்றும் நாவல் போன்ற நாட்டு மர வகைகளை நடுவதன் மூலம் சூழலியல் மறுசீரமைப்பிற்கு உட்படுத்தப்படும்.
- 70-க்கும் மேற்பட்ட நீர்நிலைகளை மீட்டெடுத்தல், ஒதுக்கப்பட்ட வனப்பகுதிகளைப் பாதுகாத்தல், நிலத்தடி நீர் செறிவூட்டல் மற்றும் தொல்பொருள் கட்டமைப்புகளை மீட்டெடுத்தல் ஆகியவை இத்திட்டத்தில் அடங்கும்.
- மரம் நடுவதற்கான நேரத்தை முன்பதிவு செய்தல், மரக்கன்றுகள் விநியோகம் மற்றும் நாற்றங்கால் தகவல்கள் மூலம் குடிமக்கள் பங்கேற்பதை பசுமை இயக்க இணைய தளம் செயல்படுத்துகிறது.

## திட்டம்: 2047ம் ஆண்டுக்குள் ஒரு மில்லியன் ஒக் மரங்கள் திட்டம்




- இமயமலை ஒக் காடுகளை மீட்டெடுக்கும் நோக்கில் சிக்கிம் முதலமைச்சர் பிரேம் சிங் தமாங் "திட்டம்: 2047- ஆம் ஆண்டுக்குள் ஒரு மில்லியன் ஒக் மரங்கள் திட்டம்" என்ற முன்னெடுப்பைத் தொடங்கி வைத்தார்.
- அதிக அளவில் உள்ளூர் ஒக் மரக்கன்றுகளை நடுவதன் மூலம் நீர் பாதுகாப்பு, பல்லுயிர் பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் நிலைத்தன்மையை மேம்படுத்துவதை இந்தத் திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது சிக்கிம் பர்யவரன் பர்வ் 2026 நிகழ்ச்சியின் போது சிக்கிமின் லக்யாப் காப்புக் காட்டில் தொடங்கப்பட்டது.
- பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக ஒக் காடு மறுசீரமைப்பு கையேட்டினை முதலமைச்சர் வெளியிட்டார் என்பதுடன் மேலும் வன ரோந்து வாகனங்களையும் கொடியசைத்துத் தொடங்கி வைத்தார்.
- இமயமலை மாநிலமான சிக்கிமில் வனப் பாதுகாப்பின் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டும் வகையில், அதன் புவியியல் பரப்பளவில் கிட்டத்தட்ட 47.33% காடுகளால் சூழப் பட்டுள்ளது.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## எஸ்.ஜானகி மறைவு




- 'தென்னிந்தியாவின் நைட்டிங்கேல்' என்று பிரபலமாக அழைக்கப்படும் பழம்பெரும் பின்னணிப் பாடகி எஸ். ஜானகி மைசூருவில் தனது 88-ஆவது வயதில் காலமானார்.
- ஆறு தசாப்தங்களுக்கும் மேலான தனது திரையுலக வாழ்க்கையில், தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் மற்றும் இந்தி உட்பட 20-க்கும் மேற்பட்ட மொழிகளில் 20,000-க்கும் மேற்பட்ட பாடல்களைப் பாடியுள்ளார்.
- சிறந்த பெண் பின்னணிப் பாடகிக்கான நான்கு தேசிய திரைப்பட விருதுகள் மற்றும் பல்வேறு மொழிகளில் 33 மாநில திரைப்பட விருதுகளைப் பெற்று, அதிக விருதுகளைப் பெற்ற இந்தியப் பின்னணிப் பாடகிகளில் ஒருவராகத் திகழ்கிறார்.
- இந்திய இசைக்கு அவர் ஆற்றிய பங்களிப்பிற்காக பத்ம பூஷண் (2023), கர்நாடக ராஜ்யோத்சவா விருது மற்றும் மைசூர் பல்கலைக்கழகத்தின் கௌரவ டாக்டர் பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★